061

# 037/DD/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR OFFICERS OF THE CO-OPERATIVE DEPARTMENT – CO-OPERATIVE CREDIT AND BANKING

(Without Books)

Maximum Time : 2 hours Maximum Marks : 80

### *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. The basic source for the cooperative principles were identified from

(A) WHO principles

(B) Rockdale pioneers Cooperative Society

(C) Triplicane Cooperative Society

(D) Cooperative Urban Bank

கூட்டுறவுக் கொள்கைகளின் மூலம் இந்த நிறுவனத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும்

(A) உலக சுகாதார

(B) ராக்டேல் முன்னோடிகள் கூட்டுறவு சங்கம்

(C) திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம்

(D) நகர கூட்டுறவு வங்கி

2. In 1937, ICA committee regarded the following principle as an essential principle of Cooperation

(A) Open membership

(B) Cash trading

(C) Political neutrality

(D) Religious affinity

1937–ல் பன்னாட்டு கூட்டுறவுகளின் கூட்டமைப்பு கீழ்கண்ட கொள்கைகளுள் ஒன்றினை கூட்டுறவின் முக்கிய கொள்கையான கருதியது

(A) வெளிப்படைத்தன்மையுடன் கூடிய உறுப்பினராதல்

(B) பணம் மூலம் வியாபாரம்

(C) அரசியல் சாராத்தன்மை

(D) சமய சார்புடைமை

3. Loan issued for the purpose of purchase of milch animals, bullock cart poultry, and sheep, minor irrigation etc.. are classified under

(A) Long term loan

(B) Medium term loan

(C) Short term loan

(D) Deposits

கறவை மாடுகள் வாங்குதல், வண்டி வாங்குதல், கோழி மற்றும் ஆடு வளர்ப்பு மற்றும் சொட்டுநீர் பாசனம் ஆகியவற்றிற்காக வழங்கப்படும் கடன்கள் இவ்வகையில் வகைப்படுத்தப்படும்

(A) நீண்டகால கடன்கள்

(B) மத்திய காலக்கடன்கள்

(C) குறுகிய காலக்கடன்கள்

(D) வைப்புகள்

4. The unorganized sector of banking system in India comprise of

(A) Commercial Banks
(B) Regional Rural Bank
(C) Cooperative Banks
(D) Money lenders

அமைப்புசாரா வங்கியாளர் என்று இந்திய வங்கியியல் முறையில் வகைப்படுத்தப்படுபவர்

(A) வணிக வங்கிகள்
(B) பிராந்திய ஊரக வங்கிகள்
(C) கூட்டுறவு வங்கிகள்
(D) கந்து வட்டிக்காரர்கள்

5. Urban Cooperative Banks are generally

(A) Agricultural Credit Societies
(B) Thrift societies
(C) Non Agricultural Credit societies
(D) Marketing Societies

நகர கூட்டுறவு வங்கிகள் பொதுவாக

(A) விவசாய கடன் சங்கங்கள்
(B) சிக்கன நாணய சங்கங்கள்
(C) விவசாயம்சாரா கடன் சங்கங்கள்
(D) விற்பனைச் சங்கங்கள்

6. Cooperative banks are controlled by

(A) State cooperative societies Act
(B) Banking Regulation act
(C) Labour act
(D) State Cooperative Societies Act and Banking Regulation act

கூட்டுறவு வங்கிகளைக் கட்டுப்படுத்துவது

(A) மாநிலகூட்டுறவு சங்கங்கள் சட்டம்
(B) வங்கிகள் கட்டுப்பாட்டு சட்டம்
(C) தொழிலாளர் சட்டம்
(D) மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் வங்கிகள் கட்டுப்பாட்டு சட்டம்

7. License is issued to Cooperative bank to undertake banking business under

(A) Section 22 of Banking Regulation Act (Applicable to Cooperative Societies)
(B) Section 21 of Banking Regulation Act (Applicable to Cooperative Societies)
(C) Section 23 of Banking Regulation Act (Applicable to Cooperative Societies)
(D) Section 24 of Banking Regulation Act (Applicable to Cooperative Societies)

வங்கியியல் வணிகம் மேற்கொள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு கீழ்கண்ட சட்ட சரத்தின் அடிப்படையில் உரிமம் வழங்கப்படுகிறது

(A) வங்கி (ஒழுங்குமுறை சட்டம் பிரிவு 22 இன்கீழ் (கூட்டுறவு சங்கங்களுக்கு பொருந்துவது)
(B) வங்கி (ஒழுங்குமுறை சட்டம் பிரிவு 21 இன்கீழ் (கூட்டுறவு சங்கங்களுக்கு பொருந்துவது)
(C) வங்கி (ஒழுங்குமுறை சட்டம் பிரிவு 23 இன்கீழ் (கூட்டுறவு சங்கங்களுக்கு பொருந்துவது)
(D) வங்கி (ஒழுங்குமுறை சட்டம் பிரிவு 24 இன்கீழ் (கூட்டுறவு சங்கங்களுக்கு பொருந்துவது)

8. The following is not one of the objective of Primary Agricultural Cooperative Credit Societies

(A) To provide storage and marketing facility to farmers

(B) To float debenture

(C) To own and maintain agricultural implements and machinery for purpose of lending

(D) To issue short term loans

கீழ்கண்டவற்றுள் ஒன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் முக்கிய நோக்கம் இல்லை

(A) விவசாயிகளுக்கு சேமிப்பு கிடங்கு மற்றும் விற்பனை வசதிகள் செய்து தருவது

(B) கடன்களின் பங்குகளை விற்பனை செய்தல்

(C) சொந்தமாக வேளாண் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவது மற்றும் வாடகைக்கு விடுவது

(D) குறுகிய கால கடன்கள் வழங்குதல்

9. The members become owners of the Cooperative Society only when they contribute the

(A) Appraiser fee (B) Dividend

(C) Share capital required (D) Deposits

ஒரு கூட்டுறவு நிறுவனத்தின் உறுப்பினர்கள் கூட்டுறவு சங்கத்தின் உரிமையாளராக மாறுவது இந்த பங்களிப்பின் மூலம் மட்டுமே

(A) தரப்பரிசோதகர் கட்டணம் (B) பங்கு ஈவு

(C) தேவையான பங்குத் தொகை (D) வைப்புகள்

10. LAMP societies are intended to provide helping hand to these people

(A) Tribal people of forest areas (B) Urban people

(C) Rural villagers (D) Foreign citizens

லேம்ப் (LAMP) கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வகையான மக்களுக்கு உதவிடும் நோக்கத்தோடு அமைக்கப்பெற்றவை

(A) காடுகளில் வாழும் மலைவாழ் மக்கள் (B) நகரத்தில் வாழும் மக்கள்

(C) ஊரக விவசாயிகள் (D) வெளிநாட்டு குடிமக்கள்

11. The scale and finance for crop loans for each crop per acre in fixed by the

(A) Profitability of District Central Cooperative Bank

(B) Area of operation of the Primary Agricultural Cooperative Credit Societies

(C) Technical committee

(D) Average rainfall of the state

ஒவ்வொரு பயிருக்கும் ஒரு ஏக்கருக்கு வழங்கப்பட வேண்டிய கடன் அளவு இதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது

(A) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் லாபம்

(B) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல்பாட்டு எல்லை

(C) தொழில்நுட்பக் குழு

(D) மாநிலத்தின் சராசரி மழையளவு

12. The main objective of maintaining reserve fund in societies are

(A) To raise dividend (B) To raise capital

(C) To meet unforeseen loss (D) To seek bank loan

காப்பு நிதியினை சங்கங்களால் பராமரிப்பதன் நோக்கம்

(A) ஈவுத் தொகையினை அதிகரித்தல் (B) முதலீட்டினை அதிகரித்தல்

(C) எதிர்பாராத இழப்புகளை எதிர்கொள்ளுதல் (D) வங்கிக் கடன் கோருதல்

13. Adequate and timely credit to farmers is ensured by providing

(A) Pan card (B) Kissan credit card

(C) Identification card (D) Ration card

விவசாயிகளுக்கு தேவையான கடன் மற்றும் சரியான நேரத்திற்குண்டான கடன் வழங்குவது இதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது

(A) பான் அட்டை (B) விவசாய கடன் அட்டை

(C) அடையாள அட்டை (D) குடும்ப அட்டை

14. Conversion of short term loans into medium term loan happens when there is

(A) Failure of crops due to natural calamities

(B) Surplus production of crops

(C) Shortage of fertilizers

(D) Insurance cover is minimal

குறுகிய கால கடன்களை மத்திய கால கடன்களாக மாற்றம் செய்யும் காரணம் இதுவாகும்

(A) இயற்கை இடர்பாடுகளினால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படும் போது

(B) பயிர்விளைச்சல் அதிகம் உள்ள போது

(C) உரம் கிடைப்பது குறையும் போது

(D) காப்பீடு குறைந்த அளவில் செய்யப்படும் போது

15. District Central Cooperative Banks provide finance to member societies against hypothecation of stock for marketing business in the form of

(A) Deposits (B) Dividends

(C) Cash credit (D) Overdraft

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், உறுப்பினர் சங்கங்களுக்கு அடமானக்கடன் பேரில் விற்பனை வணிகம் மேற்கொள்ளும்பொருட்டு இவ்வகையான நிதியுதவியினை வழங்குகின்றது

(A) வைப்புகள் (B) பங்கு ஈவுகள்

(C) காசுக் கடன் (D) மிகைப்பற்று (ஓவர் டிராப்ட்)

16. OTS in banking means

(A) One Time Speaking Order
(B) One Time Settlement Scheme
(C) Over the shipment level
(D) One Time Shopping Scheme

(OTS) ஓட்டிஎஸ் என்பது வங்கியினைப் பொறுத்தமட்டில்

(A) ஒரு முறை பேசும் ஆணை
(B) ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம்
(C) அனுமதிக்கப்பட்ட கப்பல் கொள்ளவுக்கு மேல்
(D) ஒரு முறை அங்காடித் திட்டம்

17. Lender of the last resort in Cooperative sector is

(A) District Central Cooperative Banks
(B) Primary Agricultural Cooperative Credit Societies
(C) Cooperative Urban Bank
(D) State Apex Cooperative Banks

கடனாளரின் இறுதிப் புகலிடம் என்று கூட்டுறவுத் துறையினரால் அழைக்கப்படுவது

(A) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்
(B) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்
(C) கூட்டுறவு நகர வங்கிகள்
(D) மாநில தலைமை கூட்டுறவு வங்கிகள்

18. The member of Apex Cooperative Banks are

(A) Central Cooperative Banks, State level Cooperative Institutions and Government
(B) Regional rural banks
(C) Schedule Commercial Banks
(D) Foreign banks

தலைமை கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களானோர்

(A) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், மாநில கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அரசு
(B) பிராந்திய ஊரக வங்கிகள்
(C) பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள்
(D) வெளிநாட்டு வங்கிகள்

19. Credit limits to non scheduled State Apex Cooperative Banks would be sanctioned only against

(A) Deposits
(B) Loans
(C) Government guarantee
(D) Insurance

பட்டியலிடப்படாத மாநில தலைமை கூட்டுறவு வங்கிகளுக்காக கடனளவு இதன் அடிப்படையில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது

(A) வைப்புகள்
(B) கடன்கள்
(C) அரசு உத்தரவாத பத்திரங்கள்
(D) காப்பீடு

20. The following is one of the important factor affecting profitability and co-operative institutions?

(A) High loan recovery
(B) Imbalance of funds
(C) Diversifications and business
(D) Low cost deposits

கீழ்கண்டவற்றுள் ஒன்று கூட்டுறவு நிறுவனத்தின் லாபத்தினை குறைக்கும்

(A) அதிகளவு கடன் வசூல்
(B) நிதிச் சமமின்மை
(C) வணிகம் பன்முகமாக்கல்
(D) குறைந்த வட்டி வைப்பீடுகள்

21. CRR in banking refers to

(A) Corporate Rate of Returns
(B) Cash Report Ratio
(C) Cash Reserve Ratio
(D) Cashless Reserve Ratio

சி.ஆர்.ஆர் என்பது வங்கியலில் எதனைக் குறிக்கும்

(A) பெருநிறுவன வருவாய் விகிதம்
(B) காசு அறிக்கை விகிதம்
(C) பண இருப்பு விகிதம்
(D) பணமில்லா இருப்பு விகிதம்

22. Cooperative Institutions lending for long term credit in Tamil Nadu follow

(A) Three tier system
(B) Two tier system
(C) Four tier system
(D) One tier system

தமிழ்நாட்டில் நீண்டகால கடன்கள் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்கள் இந்த அடுக்கு முறையினை பின்பற்றுகின்றன

(A) மூன்று அடுக்கு முறை
(B) இரண்டடுக்கு முறை
(C) நான்கடுக்கு முறை
(D) ஓரடுக்கு முறை

23. State Agricultural Rural Development Bank raise their source of funds mainly from

(A) Deposits
(B) Reserve funds
(C) Floatation of debentures
(D) Excess profit

மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் முக்கிய பணமுதலீடு இனங்களுள் ஒன்று

(A) வைப்புகள்
(B) காப்பு நிதி
(C) கடன் பங்குகள் விற்பனை
(D) உபரி லாபம்

24. NABARD gives financial assistance to various co-operative institutions in form of

(A) Direct lending
(B) Refinance
(C) Grant
(D) Share capital

பல்வேறு வகையான கூட்டுறவு நிறுவனங்களுக்கும் நபார்டு வங்கி இவ்வாறு நிதியுதவி புரிகின்றது

(A) நேரடிக் கடன்
(B) மறுநிதியுதவி
(C) கொடை
(D) பங்கு மூலதனம்

25. The Cooperative banks which were expected to spread banking habits among people in cities, town, and semi-urban areas are

(A) State Apex Cooperative banks (B) Primary Cooperative Credit Societies

(C) Employees Cooperative banks (D) Urban Cooperative banks

பெரு நகரங்கள், நகரங்கள் மற்றும் நகர்புறங்களிலுள்ள மக்களுக்கான வங்கி சேவைகளை அளிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள்

(A) மாநில தலைமை கூட்டுறவு வங்கிகள் (B) தொடக்க் கூட்டுறவு கடன் சங்கங்கள்

(C) பணியாளர் கூட்டுறவு வங்கிகள் (D) நகர கூட்டுறவு வங்கிகள்

26. No Interest is charged for this type and account by the banker

(A) Fixed deposit account (B) Saving account

(C) Current account (D) Insurance account

வங்கியாளரால் இந்த வகை கணக்கிற்கு வட்டி அளிக்கப்படுவதில்லை

(A) நிரந்தர வைப்பு கணக்கு (B) சேமிப்பு கணக்கு

(C) நடப்பு கணக்கு (D) காப்பீட்டு கணக்கு

27. The first Urban Cooperative Society started in India was

(A) Tirunelveli Urban Cooperative Society (B) Trivandrum Urban Cooperative Society

(C) Triplicane Urban Cooperative Society (D) Tanjore Urban Cooperative Society

இந்தியாவில் முதன்முதலில் துவங்கப்பட்ட நகர கூட்டுறவு கடன் சங்கம்

(A) திருநெல்வேலி நகர கூட்டுறவு சங்கம் (B) திருவனவந்தபுரம் நகர கூட்டுறவு சங்கம்

(C) திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் (D) தஞ்சாவூர் நகர கூட்டுறவு சங்கம்

28. TAICO is a kind of state level

(A) Industrial Cooperative bank (B) Industrial Cooperative Credit Society

(C) Employees Credit society (D) Marketing society

தாய்கோ என்பது மாநில அளவிலான

(A) தொழில் கூட்டுறவு வங்கி (B) தொழில் கூட்டுறவு கடன் சங்கம்

(C) பணியாளர் கடன் சங்கம் (D) விற்பனைச் சங்கம்

29. Every member shall subscribe to the thrift deposit in Employees Cooperative Societies till

(A) He completes his loan (B) He Continues as member of the society

(C) 1 year (D) 3 years

பணியாளர் கூட்டுறவு சங்கத்தில் உள்ள உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுறவு சிக்கன நாணய சேமிப்பு எவ்வளவு காலம் மேற்கொள்ள வேண்டும்?

(A) அவரது கடன் முழுவதும் செலுத்தும் வரையில் (B) உறுப்பினராக உள்ள காலம் முழுவதும்

(C) 1 வருடம் (D) 3 வருடங்கள்

30. NPA relates to

(A) Non recovery of assets
(B) Classification of Advances
(C) Classification of Deposits
(D) Classification of Members

என்.பி.ஏ. என்பது எதனைக் குறிக்கும்?

(A) வராக்கடன்களின் ஆஸ்தி வகைப்பாடு
(B) கடன்களின் வகைப்பாடு
(C) வைப்புகளின் வகைப்பாடு
(D) உறுப்பினர்களின் வகைப்பாடு

31. Banking is generally defined as

(A) Place where ATM is available
(B) Place where money is transferred
(C) Business of accepting deposits for purpose of lending
(D) Shopping centre

வங்கியியல் என்பது பொதுவாக இவ்வாறு விளக்கப்படுகிறது

(A) ஏடிஎம் இயந்திரம் அமைந்துள்ள இடம்
(B) பணப்பரிமாற்றம் செய்யும் இடம்
(C) கடன் வழங்கும் பொருட்டு வைப்புகளை பெறும் வணிகம்
(D) வணிக மையம்

32. When a banker accepts articles from a customer to be kept under safe custody locker, he acts as a

(A) Bailee
(B) Broker
(C) Businessman
(D) Godown keeper

ஒரு வாடிக்கையாளரிடமிருந்து ஒரு வங்கியாளர் பொருட்களை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் பொருட்டு பெறும் போது அவர் வாடிக்கையாளரைப் பொறுத்த வரை இவ்வறாக செயல்படுவார்

(A) ஒப்படைப்பாளர் (பெயிலி)
(B) தரகர்
(C) வர்த்தகர்
(D) கிடங்கு காப்பாளர்

33. The statutory obligation of a banker to honour the customers open cheque is limited to

(A) Availability of money with payment bank
(B) Availability of money with Reserve Bank of India
(C) Availability of money with customers postal account
(D) Correctness of the cheque

வாடிக்கையாளரின் திறந்த நிலை சாதாரண காசோலையினை வங்கியாளர் சட்டபூர்வமாக மதிப்பளித்து பணம் தருதல் கீழ்கண்ட வரையரைக்கு உட்பட்டதாகும்

(A) பணம் செலுத்தும் வங்கியின் நிதி நிலையினைப் பொறுத்தது
(B) பாரத ரிசர்வ் வங்கியிடம் உள்ள நிதியினைப் பொறுத்தது
(C) வாடிக்கையாளரின் தபால் கணக்கில் உள்ள பணத்தைப் பொறுத்தது
(D) காசோலையின் சரியான விவரங்களைப் பொறுத்தது

34. Right to charge compound interest is a

(A) Customers right
(B) Bankers right
(C) Right of Finance Minister
(D) Right of share holders of bank

கூட்டு வட்டியை அமுல்படுத்துவது என்பது

(A) வாடிக்கையாளரின் உரிமை
(B) வங்கியாளர் உரிமை
(C) நிதியமைச்சரின் உரிமை
(D) வங்கியின் பங்குதாரர்கள் உரிமை

35. The following is not one of the Negotiable Instruments

(A) Cheque
(B) Bill of exchange
(C) Fixed Deposit receipt
(D) Promisory note

கீழ்கண்டவற்றுள் ஒன்று பரிவர்த்தனை மாற்று ஆவணம் இல்லை

(A) காசோலை
(B) மாற்றுச்சீட்டு ஆவணங்கள்
(C) நிரந்தர வைப்பு ரசீது
(D) கடனுறுதிப் பத்திரம்

36. The main objective of banking cash transaction Tax (BCTT) is

(A) To prevent generation and laundering black money through banks
(B) Promotion of net banking
(C) Promotion of ATM's
(D) Reduce inflation

வங்கி பணப்பரிவர்த்தனை வரி என்பதன் முக்கிய நோக்கம் இதுவாகும்

(A) வங்கிகள் மூலம் கருப்பு பணப் புழக்கத்தை தவிர்ப்பது
(B) இணையதள வங்கியியல் முறையினை ஊக்குவித்தல்
(C) ஏடிஎம்களின் பயன்பாட்டினை அதிகரித்தல்
(D) பண வீக்கத்தை குறைப்பது

37. An order by one branch upon its head office or upon another branch to pay certain sum of money to the person named in the document is

(A) ATM card
(B) Demand Draft
(C) Pass book
(D) Fixed deposit receipt

ஒரு வங்கியின் கிளை, தனது தலைமை அலுவலகம் அல்லது மற்றொரு கிளையின் மூலம் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நபருக்கு பணம் வழங்கிட கோரும் ஆணை இவ்வாறு அழைக்கப்படும்

(A) ஏடிஎம்.அட்டை
(B) கேட்பு வரைவோலை
(C) செல்லேடு
(D) நிரந்திர வைப்பு ரசீது

38. Partnership deed is a document which is obtained by bankers at the time and opening account for

(A) Individual (B) Pensioner

(C) Partnership firm (D) Minor

பங்கு ஒப்பந்த ஆவணம் வங்கியாளரிடம் இவரின் பொருட்டு வங்கி கணக்கு துவங்கும் தருவாயில் சமர்பிக்கப்படுகிறது

(A) தனி நபர் (B) ஓய்வூதியதாரர்

(C) கூட்டுபங்கு நிறுவனம் (D) சிறுவயது வாடிக்கையாளர்

39. The order issued by a court attaching the funds of the customer in the hands of the banker is called

(A) Execution order (B) Auction order

(C) Garnishee order (D) Court orders

நீதிமன்றத்தின் மூலம் வாடிக்கையாளரின் பணம் வங்கியாளரிடம் பற்றுகை செய்யக்கோரும் ஆணை இவ்வாறு அழைக்கப்படும்

(A) நிறைவேற்று ஆணை (B) ஏல உத்தரவு

(C) கார்னிசீ ஆணை (D) நீதிமன்ற உத்தரவு

40. Liquidity of an assets refers to ability to the asset

(A) To be converted into cash in a short time

(B) To incur loss in short time

(C) Debt value of the asset

(D) Share market value of the asset

ஒரு சொத்தின் நீர்மத்தன்மை என்பது அந்தச் சொத்து

(A) குறுகிய காலத்தில் பணமாக மாற்றத்தக்க தன்மை

(B) குறுகிய காலத்தில் நட்டம் ஏற்படும் நிலை

(C) சொத்தின் கடன் மதிப்பு

(D) பங்குச் சந்தையில் சொத்தின் மதிப்பு

41. Lien is a type of

(A) Unsecured loan (B) Secured loan

(C) Insurance (D) Credit card

உரிமைக் கடன் என்பது ஒரு வகையான

(A) பாதுகாப்பில்லாத கடன் (B) பாதுகாக்கப்பட்ட கடன்

(C) காப்பீடு (D) கடன் அட்டை

42. Transfer of Right in the immovable property in order to secure a loan is called

(A) Personal Loan
(B) Deposit Loan
(C) Assignment
(D) Mortgage loan

ஒரு அசையாச் சொத்தின் மீதான உரிமையை மாற்றியமைத்து அதன் பெயரில் கடன் பெறுவது

(A) தனிநபர் கடன்
(B) வைப்புக்கள் மீதான கடன்
(C) ஒப்படைப்பு கடன்
(D) அடமானக் கடன்

43. A promise by the third person to the lender for the present or future debt of the borrower is called

(A) Pledge
(B) Hypothecation
(C) Guarantee
(D) Banker

ஒரு மூன்றாம் நபரால் கடன் வழங்குபவரிடம் கடன் வாங்குபவருக்காக நிகழ்காலத்தில் (அல்லது) எதிர்காலத்தின் கடனுக்காக அளிக்கப்படும் வாக்குறுதி இவ்வாறு அழைக்கப்படும்

(A) அடமானம்
(B) பிணையம்
(C) உத்தரவாதம்
(D) வங்கியாளர்

44. Margin is retained on the advance because

(A) It induces the borrower to repay the debt promptly
(B) It increases loan for borrower
(C) It reduces risk for customer
(D) It saves money for customer

கடன்களின் மீது விளிம்பு வைக்கப்படுவது இந்த காரணத்திற்காக

(A) கடனாளர் தனது கடனை உடனடியாக செலுத்திட உந்தப்படுகிறார்
(B) கடனாளருக்கான கடன் தொகை அதிகரிக்கப்படுகிறது
(C) வாடிக்கையாளருக்காக ஆபத்து குறைகிறது
(D) வாடிக்கையாளருக்குள பணம் சேமிக்கப்படுகிறது

45. The following is a document accepted by the bankers while providing advances against goods

(A) Credit Card
(B) Pass book
(C) Warehouse receipt
(D) Postal account

ஒரு வங்கியாளர் சரக்குகள் பேரில் கடன்கள் வழங்கிடும் தருவாயில் கீழ்கண்ட ஆவணங்களுள் ஒன்றினை ஏற்றுக்கொள்கிறார்

(A) கடன் அட்டை
(B) பாஸ் புத்தகம்
(C) கிட்டங்கி ரசீது
(D) தபால் கணக்கு

46. A banker who undertakes to collect the amount of a cheque for his customer from paying banker is called

(A) Assistant
(B) Bank Manager
(C) Corporation officer
(D) Collecting banker

ஒரு வாடிக்கையாளருக்காக பணம் செலுத்தும் வங்கியிடம் இருந்து பணத்தை பெற உதவும் வங்கியாளர் பெயர்

(A) உதவியாளர்
(B) வங்கி மேலாளர்
(C) நகராட்சி அலுவலர்
(D) வசூலிக்கும் வங்கியாளர் (Collecting banker)

47. An insurance claim is used to get loan from a bank by way of

(A) Post
(B) Assignment
(C) ATM
(D) Debit card

காப்பீடு ஆவணம் கொண்டு ஒரு வங்கியில் கடன் பெறுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது

(A) தபால் கடன்
(B) ஒப்படைப்பு கடன்
(C) ஏடிஎம் கடன்
(D) பற்று அட்டை கடன்

48. Loan against fixed deposit receipt issued by other banks is

(A) Refused by the lending bank
(B) Accepted by the lending bank
(C) Referred to RBI by the lending bank
(D) Referred to Income tax department

வேறொரு வங்கியின் வைப்பு ரசீதின் மீதான கடன்

(A) கடன் வழங்கும் வங்கியால் மறுக்கப்படுகிறது
(B) கடன் வழங்கும் வங்கியால் ஏற்கப்படுகிறது
(C) கடன் வழங்கும் வங்கியால் பாரத ரிசர்வ் வங்கியிடம் முறையிடப்படுகிறது
(D) வருமான வரித்துறைக்கு தெரிவிக்கப்படுகிறது

49. Assets which remain NPA for a period not exceeding 18 months are classified under

(A) Movable Assets
(B) Standard Assets
(C) Substandard assets
(D) Fixed assets

18 மாதங்களுக்குட்பட்டுள்ள வராக்கடன் மீதான சொத்துக்கள் இவ்வாறு வகைப்படுத்தப்படும்

(A) அசையும் சொத்துக்கள்
(B) நிலையான சொத்துக்கள்
(C) தரமற்ற சொத்துக்கள்
(D) அசையா சொத்துக்கள்

50. Credit can generate accelerated economic growth only when

(A) Loans taken are repaid in time

(B) Loans become overdue

(C) Insurance is not paid

(D) Cost of cultivation is high

கடன் சார்ந்த பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவது

(A) கடன்கள் உரிய காலத்தில் திரும்ப செலுத்தப்படும் போது

(B) கடன்கள் தவணை தவறும் போது

(C) காப்பீடு செலுத்தாமல் உள்ள போது

(D) வேளாண் உற்பத்தி செலவு அதிகரிக்கும் போது

51. Out of the important strategical development in the area of rural lending programme was

(A) Service area approach by bank
(B) Globalisation of Banks
(C) Privatisation of banks
(D) Merger of banks

ஊரக கடன் திட்டங்களுக்கான ஒரு முக்கியமான நிகழ்வு இதுவாகும்

(A) வங்கிகளின் சேவைப்பகுதி திட்டம்
(B) வங்கிகளின் உலகமயமாக்கல்
(C) வங்கிகளின் தனியார் மயமாக்கல்
(D) வங்கிகளை இணைத்தல்

52. As per RBI, priority sector includes

(A) Agriculture and shipping
(B) Agriculture and allied activities
(C) Industries and mining
(D) Aviation and Foreign trade

பாரத ரிசர்வ் வங்கியின்படி, முதன்மைத் துறை என்பது இவற்றை உள்ளடக்கியது

(A) வேளாண்மை மற்றும் கப்பல் வணிகம்
(B) விவசாயம் மற்றும் சார்ந்த தொழில்கள்
(C) தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கம்
(D) விமானம் மற்றும் வெளிநாட்டு வாணிபம்

53. If a bank needs to change the location of its existing offices it should get the approval of the

(A) District Collector
(B) RBI
(C) Finance Minister
(D) Local body

ஒரு வங்கி தான் செயல்பட்டு வரக்கூடிய அலுவலகத்தின் இருப்பிடத்தை மாற்ற வேண்டுமானால் யாரிடம் அனுமதி பெற வேண்டும்?

(A) மாவட்ட ஆட்சித்தலைவர்
(B) பாரத ரிசர்வ் வங்கி
(C) நிதி அமைச்சர்
(D) உள்ளாட்சி அமைப்புகள்

54. This is one of the instruments of credit control

(A) Control of profits (B) Personal loan

(C) Bank rate (D) RTGS

கடன் கட்டுப்பாட்டின் முக்கிய கருவிகளுள் ஒன்றும் இதுவாகும்

(A) லாபத்தை கட்டுப்படுத்துதல் (B) தனி நபர் கடன்

(C) வங்கி விகிதம் (D) ஆர்.டி.ஜி.எஸ்

55. MICR is a feature of

(A) Pass book (B) Demand draft

(C) Letter of credit (D) Cheque

எம்.ஐ.சி. ஆர் (MICR) என்பது இதில் உள்ள குறியீடாகும்

(A) பாஸ்புத்தகம் (B) வரைவோலை

(C) கடனுறுதிச் சீட்டு (D) காசோலை

56. Fastest mode of money transfer is through

(A) RTGS (B) Cheque

(C) Account Pay in slip (D) Money order

பணப்பரிமாற்றம் இவ்வகை மூலம் மிக விரைவாக நடைபெறும்

(A) ஆர்டிஜிஎஸ் (B) காசோலை

(C) வங்கிக் கணக்கு செலுத்துச் சீட்டு (D) பணவிடை

57. NEFT means

(A) National Election Fund transfer (B) Notional Electric Fund Transfer

(C) National Electronic Fund Transfer (D) Net fund Transfer

நெபட் (NEFT) என்பது என்ன?

(A) தேசிய தேர்தல் நிதி பரிமாற்றம் (B) பெயரளவிலான மின் நிதி பரிமாற்றம்

(C) தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (D) நிகர பண பரிமாற்றம்

58. International fund transfer is made through

(A) SWIFT (B) Kisan Credit Card

(C) Rupay card (D) Pass book

பன்னாடுகளுக்கிடையேயான பணப்பரிமாற்றம் இதன் மூலம் நடைபெறுகிறது

(A) சுவிப்ட் (SWIFT) (B) விவசாயி கடன் அட்டை

(C) ரூபே அட்டை (D) பாஸ்புத்தகம்

59. One of the benefits of e-banking is that

(A) Customers visit bank often

(B) Operating expenditure of bank is brought down

(C) Money can be transferred in person

(D) Requires technology oriented personnel

மின்னணு வங்கியியலின் ஒரு முக்கிய நற்பலன்

(A) வாடிக்கையாளர் வங்கிக்கு அடிக்கடி செல்ல வேண்டும்

(B) வங்கிகளின் செயல்படும் செலவு பெருமளவு குறைந்துள்ளது

(C) பணம் நேரடியாக நபர் மூலம் பரிமாற்றம் செய்யலாம்

(D) தொழில்நுட்பம் அறிந்த பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்

60. ATM refers to

(A) Automatic Teller Machines (B) Atomic Teller Machines

(C) Automatic Taking Money (D) Alternate Teller Machine

ஏடிஎம் என்பது

(A) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (B) அணு மூலம் பணம் வழங்கும் இயந்திரம்

(C) தானாக பணம் எடுத்தல் (D) மற்றொரு பணம் வழங்கும் இயந்திரம்

61. After purchase is made with a credit card account of the customer is

(A) Debited immediately

(B) Debited after a certain period

(C) Credited with purchase amount

(D) Locked immediately

கடன் அட்டை மூலம் ஒரு பொருளை வாங்கிய பின்பு, வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து

(A) உடனடியாக பணம் பற்று வைக்கப்படுகிறது

(B) குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு பற்று வைக்கப்படுகிறது

(C) பொருளின் அடக்கவிலை வரவு வைக்கப்படுகிறது

(D) உடனடியாக பூட்டப்படுகிறது

62. Loans for minors are given

(A) To meet their necessities (B) To go on tour

(C) To purchase car (D) To arrange for wedding

சிறார்களுக்கான கடன்கள் இதற்காக வழங்கப்படுகின்றன

(A) அவர்கள் அடிப்படைத் தேவைகளுக்காக (B) சுற்றுலா செல்வதற்காக

(C) வாகனம் (கார்) வாங்குவதற்காக (D) திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்திட

63. Cash Credit is a form of

(A) Unsecured Loan (B) Insurance

(C) Secured Loan (D) Interest

காசுக்கடன் என்பது ஒரு வகையான

(A) பாதுகாப்பற்ற கடன் (B) காப்பீடு

(C) பாதுகாப்பு கடன் (D) வட்டி

64. Additional security offered by the customer over and above the existing security is called

(A) Time security (B) Collateral security

(C) Demand security (D) Insurance claim

ஒரு வாடிக்கையாளர் வங்கியில் வழங்கியுள்ள பிணை ஆஸ்திக்கும் கூடுதலாக அளிக்கும் பிணையத்திற்குப் பெயர்

(A) காலமுறை பிணையம் (B) துணைப் பிணையம்

(C) கேட்பு பிணையம் (D) காப்பீடு கேட்பு

65. Banking Ombudsman is setup in important centres of the country by

(A) Reserve Bank of India (B) NABARD

(C) State apex cooperative bank (D) Foreign banks

வங்கியின் குறைத்தீர்ப்பாளர் (ஆம்பஸ்ட்மேன்) நாட்டின் முக்கிய மையங்களில் அமைப்பது

(A) பாரத ரிசர்வ் வங்கி (B) நபார்டு

(C) மாநில தலைமை கூட்டுறவு வங்கி (D) வெளிநாட்டு வங்கிகள்

66. The record of transactions taking place between the banker and customer is entered in

(A) Debit card (B) Bill book

(C) Text book (D) Pass book

வங்கியாளருக்கும் வாடிக்கையாளருக்குமிடையேயான பரிவர்த்தனைகளின் தொகுப்பு பதிவேடு இதுவாகும்

(A) பற்று அட்டை (B) பில் புத்தகம்

(C) பாடபுத்தகம் (D) பாஸ்புத்தகம்

67. Payment will not be made across the counter by a bank when

(A) A cheque is crossed

(B) Customer is absent

(C) A cheque is not crossed

(D) Manager is absent

வங்கியின் கவுண்டரில் பணம் எப்போது கொடுக்கப்படுவதில்லை?

(A) காசோலை குறுக்கே கோடிடப்பட்டிருக்கும் போது

(B) வாடிக்கையாளர் வராதிருந்தால்

(C) காசோலை குறுக்கே கோடிடப்படாமலிருந்தால்

(D) மேலாளர் வராமல் இருந்தால்

68. At the time of inflation, central bank will

(A) Reduce bank rate

(B) Increase bank rate

(C) Not change bank rate

(D) Waiver bank rate

பணவீக்கத்தின் போது மத்திய வங்கி

(A) வங்கி விகிதத்தை குறைத்திடும்

(B) வங்கி விகிதத்தை அதிகரிக்கும்

(C) வங்கி விகிதத்தை மாற்றாது

(D) வங்கி விகிதத்தை தள்ளுபடி செய்யும்

69. VCRR in banking means

(A) Variable Cost Reserve Ratio

(B) Very Costly Rate of Return

(C) Variable Cash Reserve Ratio

(D) Variable Cash Retained Ratio

வி.சி.ஆர்.ஆர் என்பது வங்கியியலில் இதனைக் குறிக்கும்

(A) மாறுபடும் விலை காப்பு விகிதம்

(B) விலை அதிகமுள்ள வருவாய் விகிதம்

(C) மாறுபடும் பண இருப்பு விகிதம்

(D) பலவகையான பணம் இருப்பு வைத்தல் விகிதம்

70. For maintaining statutory liquidity ratio, banks will invest in

(A) Corporate bonds

(B) Approved Government securities

(C) Real estate

(D) Share market

சட்டப்பூர்வ நீர்ம நிதி விகிதம் பராமரிப்பதற்காக வங்கிகள் இதனில் முதலீடு செய்கின்றன

(A) பெரு நிறுவன பத்திரங்கள்

(B) அங்கீகரிக்கப்பட்ட அரசு பங்குகள்/பத்திரங்கள்

(C) மனைகள்

(D) பங்குச் சந்தை

71. Which among the following is NPA?

(A) Standard Asset (B) Liquid Asset

(C) Substandard Asset (D) Fixed asset

கீழ்கண்டவற்றுள் செயல்படாத ஆஸ்தி என்பது எது?

(A) நிலையான ஆஸ்தி (B) நீர்மய ஆஸ்தி

(C) தரம் குறைந்த ஆஸ்தி (D) அசையா ஆஸ்தி

72. Income Recognition and Asset Classification (IRAC) norms were prescribed by

(A) NABARD (B) Ministry of finance

(C) RBI (D) Institute of Chartered Accountants

வருவாய் அறிதல் மற்றும் ஆஸ்திகள் வகைப்பாடு (IRAC) கோட்பாடுகளை பரிந்துரைத்தது

(A) நபார்டு (B) நிதித்துறை அமைச்சகம்

(C) பாரத ரிசர்வ் வங்கி (D) பட்டைய கணக்காளர்களின் நிறுவனம்

73. NABARD was established in

(A) 1981 (B) 1984

(C) 1980 (D) 1982

நபார்டு வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

(A) 1981 (B) 1984

(C) 1980 (D) 1982

74. One of the important features of KCC are

(A) Only big farmers are eligible for the card

(B) Small farmers are eligible for the card

(C) All farmers including tenants are eligible for the card

(D) Industrial persons are eligible for the card

விவசாயி கடன் அட்டையின் முக்கிய அம்சங்களுள் ஒன்று

(A) பெரிய விவசாயிகள் மட்டும் இந்த அட்டை பெற தகுதியானவர்கள்

(B) சிறு விவசாயிகள் அட்டை பெற தகுதியானவர்கள்

(C) குத்தகைதாரர்கள் உட்படஅனைத்து விவசாயிகளும் அட்டையினைப் பெற தகுதியானவர்கள்

(D) தொழிற்சாலையில் பணிபுரிவோர் அட்டையினை பெற தகுதியானவர்கள்

75. The main objective of organization of Farmers Service Cooperative Societies is

(A) To increase production, employment and marketing of agricultural produce

(B) To uplift urban poor

(C) To strengthen socially elite group of people

(D) To bring more lands under real estate

விவசாயிகள் சேவை கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கம் இதுவாகும்

(A) வேளாண் உற்பத்தியினை அதிகரித்தல், விற்பனை மற்றும் வேலையில்லாத திண்டாடத்தை குறைத்தல்

(B) ஊரக ஏழை மக்களை உயர்த்துதல்

(C) சமுதாயத்தின் மேநிலையில் உள்ள மக்களை ஸ்திரப்படுத்துதல்

(D) அதிகளவு நிலங்களை மனைகளாக மாற்றுதல்

76. Urban Cooperative Banks are

(A) Secondary level banks

(B) Primary Cooperative Banks

(C) Apex level Cooperative banks

(D) District level societies

நகர கூட்டுறவு வங்கிகள் என்பவை

(A) இரண்டாம் நிலை வங்கிகள்

(B) தொடக்க கூட்டுறவு வங்கிகள்

(C) தலைமை கூட்டுறவு வங்கிகள்

(D) மாவட்ட அளவிலான சங்கங்கள்

77. The main objective behind Cooperative business is

(A) To serve members of weaker sections of society

(B) To increase forex reserve

(C) To maintain profit level for the society

(D) To declare high rate of dividend for share holders

கூட்டுறவு வணிகத்தின் முக்கிய நோக்கம் இதுவாகும்

(A) நலிவுற்ற பிரிவினைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு சேவை வழங்குதல்

(B) அந்நிய செலாவணியினை அதிகரித்தல்

(C) சங்கத்தின் லாபத்தை அதிகரித்தல்

(D) அதிக அளவு பங்கு ஈவுத் தொகையினை பங்குதாரர்களுக்கு வழங்குதல்

78. Scheduled banks are those which are included in the

(A) Fourth schedule of RBI act

(B) Second schedule of RBI act

(C) First schedule of RBI act

(D) Fifth schedule of RBI act

பட்டியலிடப்பட்ட வங்கிகள் என்பவை

(A) பாரத ரிசர்வ் வங்கிச் சட்டம் பிரிவு நான்கில் உள்ளவை

(B) பாரத ரிசர்வ் வங்கிச் சட்டம் பிரிவு இரண்டில் உள்ளவை

(C) பாரத ரிசர்வ் வங்கிச் சட்டம் பிரிவு ஒன்றில் உள்ளவை

(D) பாரத ரிசர்வ் வங்கிச் சட்டம் பிரிவு ஐந்தில் உள்ளவை

79. One of the strategies followed for better recovery of crop loans is

(A) Linking of credit with marketing

(B) Recovery drive with postal correspondence

(C) Internet banking

(D) Providing low credit

பயிர் கடன்களுள் வசூலினை அதிகரிக்கும் முயற்சி இதுவாகும்

(A) கடன் மற்றும் விற்பனையினை இணைத்தல்

(B) தபால் மூலம் கடன் வசூல் மேற்கொள்ளுதல்

(C) இணையதள வங்கி முறை

(D) குறைவாக கடன் வழங்குதல்

80. The following is not among the objective of banking regulation act

(A) To regulate working of commercial banks in India

(B) To protect interest of depositors

(C) To encourage agricultural production in India

(D) To prevent foreign banks from exploiting Indian customers

கீழ்கண்டவற்றுள் ஒன்று வங்கிகள் கட்டுப்பாட்டு சட்டத்தின் நோக்கங்களுள் ஒன்று அல்ல

(A) வணிக வங்கிகளின் செயல்பாட்டினை இந்தியாவில் ஒழுங்குப்படுத்துதல்

(B) இட்டு வைப்புதாரர்களின் நலனைப் பேணுதல்

(C) இந்தியாவில் விவசாய உற்பத்தியினை அதிகரித்தல்

(D) வெளிநாட்டு வங்கிகள் இந்திய வாடிக்கையாளர்களை சுரண்டுவதிலிருந்து தடுத்தல்

037/DD/18

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR OFFICERS OF THE CO-OPERATIVE DEPARTMENT – CO-OPERATIVE CREDIT AND BANKING

(Without Books)

Maximum Time : 30 minutes Maximum Marks : 20

***IMPORTANT INSTRUCTIONS***

### DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக் படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Write the answer any FOUR of the following questions.**

கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்குகளுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

**$(4 \times 5 = 20)$**

1. Write a brief note on the objectives and membership of District Central Cooperative Banks.

   மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நோக்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் பற்றிய சிறு குறிப்பு வரைக.

[Turn over

2. Describe the objectives of Kisan Credit Card (KCC) and facilities available with KCC?

கிசான் கடன் அட்டை பற்றிய நோக்கங்களையும் அதன் பயன்பாட்டினையும் குறித்து எழுதுக.

3. How is grievance redressed in banking Ombudsman?

வங்கியின் ஓம்பஸ்மேன் அலுவலரிடம் முறையிடும் குறைகள் எவ்வாறு நிவர்த்தி செய்யப்படுகின்றன?

4. Explain the three tier system of cooperative credit structure.

மூன்றடுக்கு கூட்டுறவு கடன் அமைப்பு பற்றி விளக்குக.

5. Write a note on Asset classification and provisioning for NPA?

ஆஸ்திகள் வகைப்பாடு மற்றும் வராக்கடன்களும் அவற்றிற்கான ஒதுக்கீடு தொடர்பாக விவரி.

6. What are the advantages of E-banking?

மின்னணு மூலம் இணையதள வங்கி சேவையின் சாதகங்கள் என்னென்ன?